# रेलवे भर्ती बोर्ड / RAILWAY RECRUITMENT BOARDS

## सीईएन - 07/2025 - एनटीपीसी पूर्व-स्नातक स्तर - CEN - 07/2025 - NTPC UNDER GRADUATE LEVEL

| | |
|---|---|
| Test Date | 19/06/2026 |
| Test Time | 4:30 PM - 6:00 PM |
| Subject | RRB NTPC UnderGraduate CBT I |

*** Note**
**Correct Answer will carry 1 mark per Question.**
**Incorrect Answer will carry 1/3 Negative mark per Question.**

**1. Options shown in green color with a tick icon are correct.**
**2. Chosen option on the right of the question indicates the option selected by the candidate.**

Section : **Mathematics**

**Q.1** **ஒரு பழச்சாறு தயாரிக்க 2 லிட்டர் ஆரஞ்சுச் சாற்றுடன் 5 லிட்டர் தண்ணீர் சேர்க்கப்படுகிறது. 5 லிட்டர் ஆரஞ்சுச் சாறு பயன்படுத்தினால், அதற்குத் தேவைப்படும் தண்ணீரின் அளவு எவ்வளவு?**

**Ans**
- ✔ A. 12.5 லிட்டர்
- ✘ B. 15.5 லிட்டர்
- ✘ C. 10 லிட்டர்
- ✘ D. 18 லிட்டர்

**Q.2** **9 தொழிலாளர்களுக்கு 8 நாட்களுக்கான ஊதியம் ₹2,880 எனில், அதே வீதத்தில் 15 தொழிலாளர்களுக்கு 9 நாட்களுக்கான ஊதியம் என்னவாக இருக்கும்?**

**Ans**
- ✘ A. ₹3,600
- ✘ B. ₹3,520
- ✘ C. ₹3,880
- ✔ D. ₹5,400

**Q.3** **3, 7.2 மற்றும் 0.64 ஆகிய எண்களின் மீ.பொ.ம (LCM) _________ ஆகும்.**

**Ans**
- ✘ A. 96
- ✘ B. 153
- ✔ C. 144
- ✘ D. 72

**Q.4** **7 அடுத்தடுத்த இரட்டைப்படை எண்களின் சராசரி 32 ஆகும். மிகச்சிறிய மற்றும் மிகப்பெரிய எண்களின் கூட்டுத்தொகையைக் கண்டறியவும்.**

**Ans**
- ✘ A. 66
- ✔ B. 64
- ✘ C. 68
- ✘ D. 62

Test Prime
By Adda247

ALL EXAMS, ONE SUBSCRIPTION

Test. Analyze. Improve. Repeat.

Don't just prepare. Perform.
Test Prime — built only for mock tests.

1,50,000+ Mock Tests

25,000+ Previous Year Papers

800+ Exam Covered

500% Refund on Selection

5 lakh+ Free Quizzes

Daily Free PDFs

Job Alerts Stay Updated

- Multilingual
- Detailed Solution
- Strong and Weak Areas

All India Rankings
Compete with lakhs.
Rank. Improve. Repeat.

Adda247 test prime
Rating | Editors' choice | New

Adda247 Test Prime
Adda Education • Education
Installed

DOWNLOAD THE APP

**Q.5** ஒரு குடும்பத்தின் மாத வருமானம் 10% அதிகரிக்கிறது; ஆனால் அவர்களின் மாதச் செலவு 20% உயருகிறது. அக்குடும்பத்தின் ஆரம்ப மாத வருமானம் ₹45,000 ஆகவும் மற்றும் மாதச் செலவு ₹36,000 ஆகவும் இருந்ததெனில், உயர்விற்குப் பிறகு புதிய மாதச் சேமிப்பு எவ்வளவு?

**Ans**
- ✗ A. ₹6,200
- ✓ B. ₹6,300
- ✗ C. ₹6,400
- ✗ D. ₹6,500

**Q.6** ABCD என்பது ஒரு நாற்கரமாகும்; இதில் AB || DC ஆக உள்ளது. மற்றும் E மற்றும் F ஆகியவை முறையே மூலைவிட்டங்கள் AC மற்றும் BD-யின் நடுப்புள்ளிகளாகவும் உள்ளன. AB = 23 cm, BC = 91 cm, DC = 35 cm மற்றும் AD = 62 cm எனில், EF இன் நீளம் (cm இல்) என்ன?

**Ans**
- ✗ A. 9
- ✗ B. 8
- ✓ C. 6
- ✗ D. 7

**Q.7** The total surface area of a cube having side 64 cm is:

**Ans**
- ✗ A. 24,528 $cm^2$
- ✓ B. 24,576 $cm^2$
- ✗ C. 24,548 $cm^2$
- ✗ D. 24,589 $cm^2$

**Q.8** ஒரு குறிப்பிட்ட தொகையானது, ஆண்டுக்கு 8% என்ற தனிவட்டி வீதத்தில் 9 மாதங்களுக்கு முதலீடு செய்யப்படுகின்றது. ஈட்டப்பட்ட வட்டியானது ₹18,000 எனில், முதலீடு செய்யப்பட்ட அசல் தொகை எவ்வளவு?

**Ans**
- ✗ A. ₹3,50,000
- ✗ B. ₹4,00,000
- ✓ C. ₹3,00,000
- ✗ D. ₹2,50,000

**Q.9** ஒட்டுமொத்தமாக பூமியில் நிலம் மற்றும் நீர் ஆகியவற்றிற்கு இடையேயான விகிதம் 1:3 ஆகும். வட அரைக்கோளத்தில் இந்த விகிதம் 2:5 என உள்ளது. வட மற்றும் தென் அரைக்கோளங்களின் பரப்பளவுகள் சமம் எனில், தென் அரைக்கோளத்தில் நிலம் மற்றும் நீர் ஆகியவற்றிற்கு இடையேயான விகிதத்தைக் காண்க

**Ans**
- ✗ A. 11:7
- ✗ B. 7:5
- ✗ C. 1:5
- ✓ D. 3:11

**Q.10** ஒரு பொருள் 38% லாபத்தில் விற்கப்படுகிறது. அதன் அடக்கவிலை ₹20 அதிகரித்து மற்றும் விற்பனை விலை ₹45 குறைக்கப்படுகிறது எனில், லாபம் 37.5% ஆக இருக்கும். அந்தப் பொருளின் அசல் அடக்கவிலை (₹ இல்) என்ன?

**Ans**
- ✗ A. 14,300
- ✗ B. 14,400
- ✗ C. 14,700
- ✓ D. 14,500

**Q.11** 3 ஆல் வகுபடும்போது 2 ஐ மீதியாகவும், 4 ஆல் வகுபடும்போது 3 ஐ மீதியாகவும், மேலும் 5 ஆல் வகுபடும்போது 4 ஐ மீதியாகவும் கொடுக்கக்கூடிய மிகச்சிறிய மிகை முழு எண்ணைக் காண்க.

**Ans**
- ✗ A. 53
- ✗ B. 50
- ✗ C. 69
- ✓ D. 59

**Q.12** நான்கு ஆண்டுகளுக்கு முன்பு, ரவியின் வயது கவிராஜின் வயதைப் போல மூன்று மடங்காக இருந்தது. தற்போது, ரவியின் வயது கவிராஜின் வயதைப் போல இரண்டு மடங்காக உள்ளது. எனில், ரவியின் தற்போதைய வயதைக் காண்க.

**Ans**
- ✗ A. 8 ஆண்டுகள்
- ✓ B. 16 ஆண்டுகள்
- ✗ C. 14 ஆண்டுகள்
- ✗ D. 10 ஆண்டுகள்

**Q.13** 3,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு தொட்டியை, C மற்றும் D ஆகிய குழாய்கள் முறையே 6 மணிநேரம் மற்றும் 4 மணிநேரத்தில் நிரப்ப முடியும். எனில், இவ்விரண்டு குழாய்களும் இணைந்து செயல்பட்டால், 6,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு தொட்டியை நிரப்ப எத்தனை மணிநேரம் ஆகும்?

**Ans**
- ✗ A. 4.44 மணி நேரம்
- ✓ B. 4.8 மணி நேரம்
- ✗ C. 3.5 மணி நேரம்
- ✗ D. 6 மணி நேரம்

**Q.14** 31 × 13 + 18 × 86 – 86 = y, என்றால், y இன் மதிப்பு என்ன?

**Ans**
- ✗ A. 1765
- ✗ B. 1665
- ✗ C. 1965
- ✓ D. 1865

**Q.15** ஒரு எண்ணானது இரு பகுதிகளாகப் பிரிக்கப்படுகிறது; எவ்வாறெனில், அவற்றில் ஒரு பகுதியானது, மற்றொரு பகுதியைவிட 10 அதிகமாக உள்ளது. அவற்றின் விகிதம் 6:4 எனில், அந்த எண்ணின் இரண்டு பகுதிகள் யாவை?

**Ans**
- ✗ A. 34 மற்றும் 24
- ✗ B. 32 மற்றும் 22
- ✗ C. 32 மற்றும் 20
- ✓ D. 30 மற்றும் 20

**Q.16** சூரியனின் ஏற்றக்கோணம் 60° யிலிருந்து 45° ஆக மாறும்போது, ஒரு கோபுரத்தின் நிழலின் நீளம் 20 m அதிகரிக்கிறது. அக்கோபுரத்தின் உயரத்தைக் (ஒரு தசம இடத்திற்கு முழுமையாக்கி, m இல்) கண்டறியவும். ($\sqrt{3}$ = 1.7 எனப் பயன்படுத்துக).

**Ans**
- ✓ A. 48.6
- ✗ B. 17.4
- ✗ C. 24.7
- ✗ D. 27.5

**Q.17** A மற்றும் B ஆகியோர் ஒரு வேலையை முறையே 12 நாட்களிலும், 20 நாட்களிலும் செய்து முடிக்க முடியும். இருவரும் ஒன்றாக அந்த வேலையை 3 நாட்கள் செய்தபின்னர், A ஆனவர் வெளியேறுகிறார். எனில், B ஆனவர், மீதமுள்ள வேலையை முடிக்க எவ்வளவு காலம் (நாட்களில்) எடுப்பார்?

**Ans**

- ✔ A. 12
- ✘ B. 13
- ✘ C. 11
- ✘ D. 14

**Q.18** ஒரு பொருள் 20% லாபத்தில் விற்கப்படுகிறது. அதன் விற்பனை விலையை 10% குறைத்தால், லாப சதவீதம் என்னவாக இருக்கும்?

**Ans**

- ✘ A. 6%
- ✘ B. 12%
- ✔ C. 8%
- ✘ D. 20%

**Q.19** ஒரு ஒழுங்குப் பலகோணம் 45 பக்கங்களைக் கொண்டுள்ளது,மற்றும் அதன் ஒவ்வொரு பக்கத்தின் நீளமும் 2 cm நீளம் எனில், அப்பலகோணத்தின் பரப்பளவு ($cm^2$ இல்) என்ன?

**Ans**

- ✘ A. $45$
- ✘ B. $45\cos(4^\circ)$
- ✔ C. $45\tan(4^\circ)$
- ✘ D. $45\cot(4^\circ)$

**Q.20** ஒருவர் ஒரு குறிப்பிட்ட தொலைவை ரயில் மூலம் கடக்கிறார். அந்த இரயிலானது வழக்கமான வேகத்தை விட 14 km/hr கூடுதல் வேகத்தில் சென்றிருந்தால், பயண நேரம் 35 நிமிடங்கள் குறைந்திருக்கும். அதுவே, 10 km/hr குறைவான வேகத்தில் சென்றிருந்தால், பயண நேரம் 30 நிமிடங்கள் கூடுதலாக இருந்திருக்கும். எனில், அந்த ரயில் கடந்த மொத்தத் தொலைவைக் கண்டறியவும்.

**Ans**

- ✔ A. 780 km
- ✘ B. 480 km
- ✘ C. 720 km
- ✘ D. 560 km

**Q.21** ஒரு இயந்திரத்தின் விலை 20% அதிகரிக்கிறது. தேவை வீழ்ச்சிஅடைந்ததன் காரணமாக, அதிகரித்த விலை 25% குறைக்கப்படுகிறது. இறுதியாக, விலை மீண்டும் 10% அதிகரிக்கிறது. எனில், இயந்திரத்தின் விலையில் ஏற்பட்ட ஒட்டுமொத்த சதவீத மாற்றம் என்ன?

**Ans**

- ✔ A. 1% குறைவு
- ✘ B. 1.1% குறைவு
- ✘ C. 1% அதிகரிப்பு
- ✘ D. 1.1% அதிகரிப்பு

Q.22 ஒரு தொழிற்சாலை A, B மற்றும் C ஆகிய மூன்று வகையான விட்ஜெட்டுக்களை உற்பத்தி செய்கிறது. ஒரு வாரத்தில், A இன் 12 அலகுகள் (சராசரியாக ஒவ்வொன்றும் தலா 47 kg எடை கொண்டவை ), B இன் 8 அலகுகள் (சராசரியாக ஒவ்வொன்றும் தலா 62 kgஎடை கொண்டவை ) மற்றும் C இன் 15 அலகுகள் (சராசரியாக ஒவ்வொன்றும் தலா 53 kg எடை கொண்டவை) உற்பத்தி செய்யப்படுகின்றன எனில், அந்த வாரத்தில் உற்பத்தி செய்யப்பட்ட விட்ஜெட்டுகளின் எடையிட்ட சராசரி எடையைக் (Weighted Average Weight) காண்க?

Ans
- ✗ A. 54 kg
- ✓ B. 53 kg
- ✗ C. 51 kg
- ✗ D. 52.5 kg

Q.23 ஒரு வாடிக்கையாளர் ஆன்லைனில் ₹1,000 மதிப்புள்ள உணவை ஆர்டர் செய்கிறார். உணவு டெலிவரி செயலி பில்லின் மீது 20 % பிளாட் விளம்பர தள்ளுபடியை (flat promotional discount) வழங்குகிறது. இந்த தள்ளுபடிக்குப் பிறகு, பில் தொகை ₹650 முதல் ₹800 வரை (இரண்டும் உட்பட) இருந்தால், அந்த பில்லின் மீது 5 % கூடுதல் தள்ளுபடி பயன்படுத்தப்படும். அனைத்து ஆர்டர்களும் ₹80 என்ற நிலையான டெலிவரி கட்டணத்தை (fixed delivery charge) உள்ளடக்கியது என்றால், வாடிக்கையாளர் செலுத்த வேண்டிய இறுதி தொகை என்ன?

Ans
- ✗ A. ₹760
- ✗ B. ₹900
- ✗ C. ₹800
- ✓ D. ₹840

Q.24 A student adds 3/5 unit of a solution, then adds 0.4 unit of the same solution, and finally removes 1/10 unit. What is the net change in the quantity of the solution?

Ans
- ✗ A. decrease of 1.5 unit
- ✓ B. increase of 0.9 unit
- ✗ C. decrease of 0.8 unit
- ✗ D. increase of 1.0 unit

Q.25 ஆண்டுக்கு ஒரு முறை கூட்டப்படும் ஒரு கூட்டுவட்டி வீதத்தில்,₹25,600 என்ற தொகைக்கு, ஆண்டுக்கு $12\frac{1}{2}\%$ வீதம் என்ற கூட்டு வட்டி வீதத்தில் 2 ஆண்டுகள் 3 மாதங்களுக்கான கூட்டு வட்டியைக் கண்டறியவும்.

Ans
- ✗ A. ₹8,650.50
- ✗ B. ₹10,580.50
- ✓ C. ₹7,812.50
- ✗ D. ₹9,750.50

Q.26 A, B மற்றும் C ஆகியோர் ஒரு தொழிலில் கூட்டாளிகள். 4 மாதங்கள் முதலீடு செய்துள்ள A, மொத்த லாபத்தில் $\frac{1}{8}$ பங்கை அவர் பெறுவதாகக் கூறுகிறார். 6 மாதங்கள் முதலீடு செய்துள்ள B, மொத்த லாபத்தில் $\frac{1}{8}$ பங்கை அவர் பெறுவதாகக் கூறுகிறார். C என்பவர் ₹1560-என்ற தொகையை 8 மாதங்களுக்கு முதலீடு செய்துள்ளார் எனில், A பங்களிப்பு செய்த தொகை எவ்வளவு?

Ans
- ✗ A. ₹690
- ✗ B. ₹794
- ✗ C. ₹810
- ✓ D. ₹720

Q.27 ஒரு கார் சீரான வேகத்தில், 360 km தூரத்தை 8 மணி நேரத்தில் கடக்கிறது. அதன் வேகத்தை மீட்டர்/விநாடியில் காண்க.

Ans
- ✗ A. 13 m/s
- ✗ B. 12 m/s
- ✓ C. 12.5 m/s
- ✗ D. 13.5 m/s

Q.28 சுருக்குக:

$$\left\{\left(\frac{13}{33}\right) \div \left(\frac{13}{7}\right)\right\} \div \left(\frac{2}{8} x \frac{16}{6} + \frac{5}{11}\right) + \frac{7}{3} \div \frac{37}{20} of \frac{20}{3}$$

Ans
- ✗ A. $\frac{19}{44}$
- ✗ B. $\frac{17}{29}$
- ✗ C. $\frac{17}{42}$
- ✓ D. $\frac{14}{37}$

Q.29 இரண்டு மிகை எண்களின் கூட்டுத்தொகை 13 மற்றும் அவற்றின் பெருக்கற்பலன் 30 ஆகும். எனில், அவற்றுக்கிடையேயான நேர்மறை வித்தியாசம் ________ ஆகும்.

Ans
- ✗ A. 8
- ✓ B. 7
- ✗ C. 12
- ✗ D. 9

Q.30 ஒரு வியாபாரி ஒரு குறிப்பிட்ட ரகக் காற்சட்டைகளின் மீது "இரண்டு வாங்கினால் ஒன்று இலவசம்" என்ற சலுகையை வழங்குகிறார். ஒரு காற்சட்டையின் குறிக்கப்பட்ட விலை ₹2,700 ஆகும். இந்தச் சலுகைக்குப் பிறகும் அந்த வியாபாரி 20% லாபம் ஈட்டுகிறார் எனில், ஒரு காற்சட்டையின் அடக்க விலையை காண்க

Ans
- ✓ A. ₹ 1,500
- ✗ B. ₹ 1,450
- ✗ C. ₹ 1,600
- ✗ D. ₹ 1,550

## Section : General Awareness

Q.31 பின்வருபவர்களுள், பண்டைய இந்தியாவில் மிகவும் புகழ்பெற்ற இந்தோ-கிரேக்க மன்னர் யார்?

Ans
- ✗ A. புஷ்யமித்ரர்
- ✗ B. ருத்திரதாமன்
- ✗ C. அலெக்சாண்டர்
- ✓ D. மெனாண்டர்

**Q.32** **இந்தியத் துணைக்கண்டத்தின் தாமோதர் பள்ளத்தாக்கு, பெரும்பாலும் எந்தக் கனிமப் படிவில் செழித்து விளங்குகிறது?**

Ans
- ✗ A. சுண்ணாம்புக் கல்
- ✗ B. இரும்பு
- ✗ C. மெக்னீசியம்
- ✓ D. நிலக்கரி

**Q.33** **ஹைட்ரஜன் அயனிகள் தனியாக இருக்க முடியாததால், அவை நீர் மூலக்கூறுகளுடன் இணைந்த பிறகு காணப்படுகின்றன. எனவே, இவை எப்போதும், பின்வருவனவற்றுள் எதை, $H_3O^+$ எனக் குறியிடப்பட வேண்டும்?**

Ans
- ✓ A. ஹைட்ரோனியம் அயனி
- ✗ B. ஹைட்ராக்சைடு அயனி
- ✗ C. ஹைட்ரஜன் வாயு
- ✗ D. ஆக்சைடு அயனி

**Q.34** **மத்திய வரவு செலவுத் திட்டம் 2025-26-இன் படி, அரசாங்கம் ஒரு கடல்சார் மேம்பாட்டு நிதியத்தை (Maritime Development Fund) எவ்வளவு மூலதன நிதியுடன் (corpus) நிறுவுவதாக அறிவித்தது?**

Ans
- ✗ A. ₹20,000 கோடி
- ✓ B. ₹25,000 கோடி
- ✗ C. ₹30,000 கோடி
- ✗ D. ₹35,000 கோடி

**Q.35** **ஆகஸ்ட் 2025 இல், அசாம் மற்றும் மணிப்பூர் மாநில அதிகாரிகளுடன் இணைந்து இந்திய இராணுவத்தால் அசாமின் தின்சுகியா (Tinsukia) மாவட்டத்தில் உள்ள லைபுலியில் தொடங்கப்பட்ட 'சமன்வாய் சக்தி' (Samanvay Shakti) பயிற்சியின் முக்கிய நோக்கம் என்னவாக இருந்தது?**

Ans
- ✓ A. பாதுகாப்புப் படைகள், அரசுத் துறைகள் மற்றும் குடிமை நிறுவனங்களுக்கு இடையே ஒருங்கிணைப்பை வளர்ப்பதற்கான இராணுவ-குடிமை (Military-civil integration t) ஒருங்கிணைப்பு.
- ✗ B. பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளுக்காக இந்தியாவிற்கும் நட்பு வெளிநாடுகளுக்கும் இடையிலான கூட்டு இராணுவப் பயிற்சி
- ✗ C. இந்தியா-மியான்மர் ராணுவ ஒத்துழைப்பை வலுப்படுத்தும் நோக்கில் எல்லைப் பாதுகாப்புப் பயிற்சி
- ✗ D. நிலநடுக்கம் மற்றும் வெள்ளப் பேரிடர் ஆயத்தநிலைக்கான முக்கியக் கவனத்துடன் கூடிய பெருமளவிலான பேரிடர் மேலாண்மை ஒத்திகை.

**Q.36** **2025 பிரிக்ஸ் (BRICS) வேளாண்மை அமைச்சர்களின் உச்சி மாநாட்டை நடத்திய நாடு எது?**

Ans
- ✓ A. பிரேசில்
- ✗ B. எகிப்து
- ✗ C. வியட்நாம்
- ✗ D. அர்ஜென்டினா

**Q.37** **To which Hindu deity is the Sun Temple at Konark dedicated?**

Ans
- ✓ A. Surya
- ✗ B. Vishnu
- ✗ C. Brahma
- ✗ D. Shiva

**Q.38** பின்வருவனவற்றில் எது இந்தியாவின் 1991 பொருளாதார சீர்திருத்தங்களின் முதன்மையான நோக்கங்களில் ஒன்றாகும்?

**Ans**

✔ A. உலகளாவிய சந்தைகளுக்குப் பொருளாதாரத்தைத் திறத்தல்

✘ B. இறக்குமதித் தடைகளை வலுப்படுத்துதல்

✘ C. பொதுத்துறையின் ஆதிக்கத்தை ஊக்குவித்தல்

✘ D. வேளாண்மையில் தன்னிறைவு அடைதல்

**Q.39** பின்வருவனவற்றுள் எது, தீவிர எரிமலை செயல்பாட்டின் ஒரு மைய பிளவு மண்டலத்துடன் கூடிய, மூழ்கிய மலைத்தொடர்களின் ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட ஒரு சங்கிலியாக வகைப்படுத்தப்பட்டதாகும்?

**Ans**

✘ A. கண்டச் சரிவு (Continental slope)

✘ B. ஆழ்கடல் சமவெளி (Abyssal plains)

✔ C. நடுக்கடல் முகடுகள் (Mid-oceanic ridges)

✘ D. ஆழ்கடல் அகழிகள் (Deep-ocean trenches)

**Q.40** ஐரோப்பாவின் மிகப்பெரிய மற்றும் மிக அதிக அளவில் செயலில் உள்ள எரிமலையான மவுண்ட் எட்னா, அதன் அடிக்கடி நிகழும் மற்றும் தொடர்ச்சியான வெடிப்புகளுக்கு பெயர் பெற்றது, இது ____________ இல் அமைந்துள்ளது, இது பிப்ரவரி 2025 இல், தென்கிழக்கு எரிமலைப் பள்ளத்தின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள ஒரு துவாரத்தில் ஒரு புதிய எரிமலை வெடிப்பு ஏற்பட்டதாகப் பதிவு செய்தது.

**Ans**

✔ A. இத்தாலி

✘ B. எஸ்டோனியா

✘ C. லக்சம்பர்க்

✘ D. செர்பியா

**Q.41** Which of the following key combinations is used to open the File menu in many applications?

**Ans**

✘ A. Alt + Tab

✔ B. Alt + F

✘ C. Alt + Del

✘ D. Alt + Insert

**Q.42** அக்பரின் வருவாய் அமைச்சரான தோடர் மால், பயிர் விளைச்சல், நில அளவீடுகள் மற்றும் விலைகளை அடிப்படையாகக் கொண்ட, ___________ என்றழைக்கப்படும் ஒரு திறமையான வருவாய் முறையை அறிமுகப்படுத்தினார்.

**Ans**

✘ A. ஜாகிர்தாரி முறை

✔ B. ஜப்தி முறை

✘ C. மன்சப்தாரி முறை

✘ D. ரயத்துவாரி முறை

**Q.43** பின்வருபவர்களில் யார் கர்நாடக இசையுடன் தொடர்பில்லாதவர் ஆவார்?

**Ans**

✘ A. DK பட்டம்மாள்

✘ B. விஜயலக்ஷ்மி சுப்ரமணியம்

✘ C. நித்யஸ்ரீ மகாதேவன்

✔ D. ரவிசங்கர்

**Q.44** சாந்தலர்களின் கலகத்தில் (1855–57), சாந்தலர்கள் முக்கியமாக யாருக்கு எதிராகத் தங்கள் சினத்தை திருப்பினார்கள்

**Ans**
- ✗ A. தொலைதூரப் படைப்பிரிவுகளில் பணியமர்த்தப்பட்ட வங்காள இராணுவ வீரர்கள்
- ✗ B. பஞ்ச காலத்தில் இலவச உணவை விநியோகித்த மதபோதகர்கள்
- ✗ C. பாரம்பரிய கிராமத் தலைவர்கள் மற்றும் தங்கள் சொந்தப் பழங்குடியினத்தின் குலத் தலைவர்கள்
- ✓ D. பிரிட்டிஷ் அதிகாரிகள், ஜமீன்தார்கள், வர்த்தகர்கள் மற்றும் உள்ளூரில் வட்டிக்குக் கடன் கொடுப்போர்

**Q.45** பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா-கிராமின் (PMAY-G) திட்டத்தின் கீழ் பயனாளிகளைத் தேர்ந்தெடுப்பதற்கான முதன்மை அளவுகோல் என்ன?

**Ans**
- ✗ A. வேளாண்மை மூலம் ஈட்டப்படும் வருமானம்
- ✗ B. கல்வித் தகுதிகள்
- ✓ C. சமூக-பொருளாதார மற்றும் சாதிவாரி கணக்கெடுப்பு, 2011
- ✗ D. நில உரிமை ஆவணங்கள்

**Q.46** DPSP-களை ஊக்குவிக்கும் சட்டங்கள், குறிப்பிட்ட சில அடிப்படை உரிமைகளை மீறுவதால், அவை இணக்கமாகப் பொருள்படுத்தப்படும் வரை (interpreted harmoniously), அவை ரத்து செய்யப்படுவதிலிருந்து பாதுகாக்கப்படுவதற்கு எந்த நீதித்துறை கோட்பாடு அனுமதிக்கிறது?

**Ans**
- ✗ A. பிரிக்கப்படும் தன்மைக் கோட்பாடு (Doctrine of Severability)
- ✗ B. அடிப்படை கட்டமைப்பு கோட்பாடு (Doctrine of Basic Structure)
- ✓ C. இணக்கமான கட்டுமானக் கோட்பாடு (Doctrine of Harmonious Construction)
- ✗ D. பாதுகாப்புப் பாகுபாட்டுக் கோட்பாடு (Doctrine of Protective Discrimination)

**Q.47** Which device converts **printed text** into machine-encoded text using pattern recognition?

**Ans**
- ✗ A. Barcode reader
- ✗ B. MICR reader
- ✗ C. OMR scanner
- ✓ D. OCR scanner

**Q.48** பாரி மற்றும் நியோகா (Baryi and Nyioga) ஆகியவை பின்வரும் எந்த மாநிலத்தைச் சேர்ந்த நாட்டுப்புற இசை வடிவங்களாகும்?

**Ans**
- ✗ A. மிசோரம்
- ✓ B. அருணாச்சலப் பிரதேசம்
- ✗ C. மணிப்பூர்
- ✗ D. திரிபுரா

**Q.49** _____ ஆம் ஆண்டில் பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளைத் திரும்பப் பெறும் ஒரு புதிய துறை (Department of Disinvestment) உருவாக்கப்பட்டபோது, பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளைத் திரும்பப் பெறுதல் குறித்த கொள்கை தீவிரமடைந்தது; பின்னர் இது 2001 இல் ஒரு முழு அமைச்சகமாக மாறியது.

**Ans**
- ✗ A. 1991
- ✗ B. 2000
- ✓ C. 1999
- ✗ D. 1992

**Q.50** பின்வருவனவற்றில் எது, பாஸ்பரஸ் தனிமத்தின் சரியான எலக்ட்ரானிக் கட்டமைப்பைக் (electronic configurations) குறிக்கிறது?

**Ans**
- ✗ A. K=2, L=7, M=6
- ✗ B. K=2, L=5, M=8
- ✗ C. K=2, L=6, M=7
- ✓ D. K=2, L=8, M=5

Q.51 Which of the following applications are supercomputers primarily used for?

Ans
- ✔ A. Complex mathematical calculations
- ✗ B. Word processing
- ✗ C. Internet browsing
- ✗ D. Office automation

Q.52 1872 ஆம் ஆண்டிலிருந்து கணக்கிடப்படும் தொடர்ச்சியான மக்கள் தொகை கணக்கெடுப்புகளின் வரிசையில், இந்தியாவின் 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பு ஆனது அதிகாரப்பூர்வமாக எத்தனையாவது கணக்கெடுப்பாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது?

Ans
- ✗ A. 14வது தேசிய மக்கள் தொகை கணக்கெடுப்பு
- ✗ B. 16வது தேசிய மக்கள் தொகை கணக்கெடுப்பு
- ✗ C. 13வது தேசிய மக்கள் தொகை கணக்கெடுப்பு
- ✔ D. 15வது தேசிய மக்கள் தொகை கணக்கெடுப்பு

Q.53 பின்வருவனவற்றில் எந்தக் கோவில், 24 சக்கரங்களைக் கொண்ட சூரியனின் பிரம்மாண்டமான தேராக அதன் பிரதிநிதித்துவமாக வடிவமைக்கப்பட்டுள்ளது ?

Ans
- ✔ A. சூரியக் கோவில், கோனார்க்
- ✗ B. விரூபாக்ஷர் கோவில்
- ✗ C. மகாபோதி கோவில்
- ✗ D. ஐராவதேஸ்வரர் கோவில்

Q.54 Arundhati Roy's first full-length memoir, published in 2025, is titled:

Ans
- ✗ A. Notes from a Small Town
- ✗ B. The Ministry of Lost Stories
- ✔ C. Mother Mary Comes To Me
- ✗ D. Walking with the Ants

Q.55 வேலை மற்றும் ஆற்றலை அளவிடுவது பற்றிய ஒரு வகுப்பறை விவாதத்தில், மாணவர்கள் இந்த அளவுகளுக்கான சரியான SI அலகு மற்றும் பரிமாண வாய்பாட்டை அடையாளம் காணுமாறு கேட்கப்படுகிறார்கள். வேலை அல்லது ஆற்றல் ஆகிய இரண்டிற்குமான அலகுகளையும் எந்த விருப்பம் சிறப்பாகக் குறிக்கிறது?

Ans
- ✗ A. பாஸ்கல் மற்றும் $M L^{-1} T^{-2}$
- ✗ B. வாட் மற்றும் $M L^{2} T^{-3}$
- ✗ C. நியூட்டன் மற்றும் $M L T^{-2}$
- ✔ D. ஜூல் மற்றும் $M L^{2} T^{-2}$

Q.56 Who among the following has been sworn in as the 24$^{th}$ Prime Minister of Canada in March 2025?

Ans
- ✗ A. Claudia Sheinbaum
- ✔ B. Mark Carney
- ✗ C. Donald Tusk
- ✗ D. James David Vance

Q.57 பின்வரும் போர்களில் எது 1761 இல் மராட்டியப் பேரரசின் நார்த்தன் எக்ஸ்பெடிஷனரி ஃபோர்ஸ்க்கும் (வடக்கு நோக்கிய இராணுவப் பயணம்) (Northern Expeditionary Force of the Maratha ) ஆப்கானிஸ்தான் மன்னரின் கூட்டணிக்கும் இடையே நடைபெற்றது?

Ans
- ✗ A. முதல் ஆங்கிலோ-ஆப்கான் போர்
- ✗ B. இரண்டாவது தாரைன் போர்
- ✗ C. பெஷாவர் போர்
- ✔ D. மூன்றாவது பானிபட் போர்

Q.58 வடமேற்கு இந்தியாவில், திடீர் குளிர்கால மழைப்பொழிவுக்கு எந்த காலநிலை நிகழ்வு காரணமாகும்?

Ans
✔ A. மேற்கத்திய இடையூறுகள் (Western Disturbances)
✘ B. ஈஸ்டர் அலைகள்
✘ C. உள்ளூர் காற்று
✘ D. ஜெட் ஸ்ட்ரீம்ஸ் (Jet streams)

Q.59 சமூக மற்றும் பொருளாதார நீதியை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட இந்திய அரசியலமைப்பின் அரசு கொள்கையினை நெறிப்படுத்தும் கோட்பாடுகளுக்கு பெரும் தூண்டுதலாக 1931-ஆம் ஆண்டின் தீர்மானம் அமைந்தது. அது எந்த தீர்மானம் ஆகும்?

Ans
✔ A. கராச்சி தீர்மானம்
✘ B. லாகூர் தீர்மானம்
✘ C. டெல்லி தீர்மானம்
✘ D. லக்னோ தீர்மானம்

Q.60 இந்திய அரசியலமைப்பின் சட்டப்பிரிவு 350B-ஆனது, பின்வருபவர்களில் யாரின் நியமனத்தைப் பற்றிக் குறிக்கிறது?

Ans
✔ A. சிறுபான்மை மொழிகளுக்கான சிறப்பு அதிகாரி
✘ B. பட்டியலிடப்பட்ட பழங்குடியினருக்கான சிறப்பு அதிகாரி
✘ C. பிற பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான சிறப்பு அதிகாரி
✘ D. பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான சிறப்பு அதிகாரி

Q.61 Who is the final appellate authority under the Right to Information Act?

Ans
✘ A. Supreme Court
✔ B. Central Information Commission
✘ C. Lokpal
✘ D. High Court

Q.62 எந்தச் சட்டப்பிரிவானது, அடிப்படை உரிமைகளுக்கு முரணான சட்டங்களை இயற்றுவதை அரசு தடுப்பதுடன், நீதித்துறை மறுஆய்வுக்கான அடித்தளத்தையும் உருவாக்குகிறது?

Ans
✘ A. சட்டப்பிரிவு 17
✘ B. சட்டப்பிரிவு 5
✘ C. சட்டப்பிரிவு 9
✔ D. சட்டப்பிரிவு 13

Q.63 Who among the following was NOT a founding member of the Indian National Congress?

Ans
✘ A. John Jardine
✔ B. Bal Gangadhar Tilak
✘ C. William Wedderburn
✘ D. Dinshaw Wacha

Q.64 எந்த செயல்பாடானது, முதன்மையாக மெடுல்லாவால் (Medulla) ஒழுங்குபடுத்தப்படுகிறது?

Ans
✔ A. அனிச்சைச் செயல்கள்
✘ B. பார்வை
✘ C. சிந்தனை
✘ D. நினைவு

**Q.65** இந்திய வனஆய்வு அறிக்கை (FSI) 2021-இன் படி, எந்த மாநிலம் அல்லது யூனியன் பிரதேசமானது, அதன் புவியியல் பரப்பளவில் மிகஅதிக சதவீத வனப்பகுதியைக் கொண்டுள்ளது?

**Ans**
- ✗ A. அசாம்
- ✗ B. சத்தீஸ்கர்
- ✗ C. ஆந்திரப் பிரதேசம்
- ✓ D. மிசோராம்

**Q.66** What does Article 13 of the Indian Constitution primarily deal with?

**Ans**
- ✓ A. Judicial Review
- ✗ B. Freedom of Speech
- ✗ C. Right to Equality
- ✗ D. Reservation Policy

**Q.67** நவம்பர் 2025 இல் வெளியிடப்பட்ட இந்திய உச்ச நீதிமன்ற உத்தரவுகளின்படி, பள்ளிகள், மருத்துவமனைகள் மற்றும் ரயில் நிலையங்கள் போன்ற நிறுவன பொது இடங்களிலிருந்து எந்த விலங்குகளை அகற்றி நிரந்தரமாக இடமாற்றம் செய்ய வேண்டும்?

**Ans**
- ✓ A. தெரு நாய்கள்
- ✗ B. சாலைகளில் திரியும் கழுதைகள்
- ✗ C. சாலைகளில் திரியும் மாடுகள்
- ✗ D. தெரு பூனைகள்

**Q.68** பின்வரும் டாஸ்க்குகளில் எது, சிஸ்டம் சாஃப்ட்வேரின் பங்கிற்கு பிரத்தியேகமானதும், அப்ளிகேஷன் சாஃப்ட்வேர் புரோகிராமால் செய்ய முடியாததாகும்?

**Ans**
- ✗ A. ஒரு கீபோர்டிலிருந்து யூசர் இன்புட்டை ஏற்றுக்கொள்வது மற்றும் மானிட்டரில் அவுட்புட்டைக் காண்பித்தல்.
- ✗ B. ஒரு ஹார்ட் டிஸ்க் டிரைவில் டேட்டா ஸ்டோரேஜ் மற்றும் ரெட்ரீவலை நிர்வகித்தல்.
- ✗ C. திரும்பத் திரும்ப செய்யப்படும் டாஸ்க்குகளின் ஒரு தொடரை தானியக்கமாக்குவதற்கு ஒரு பிரீ-ரிட்டன் ஸ்கிரிப்டை எக்ஸிகியூட் செய்தல்.
- ✓ D. புதிதாக தொடங்கப்பட்ட புரோகிராமுக்கு, CPU இன் பிராசஸிங் டைம்-இன் ஒரு குறிப்பிட்ட பிளாக்-ஐ அலோகேட் செய்தல்.

**Q.69** கேலோ இந்தியா யூத் கேம்ஸ் 2025-க்கான சின்னத்தின் (Mascot) பெயர் என்ன?

**Ans**
- ✗ A. சிம்ஹால் (Simhal)
- ✗ B. ஹாதிஷேர் (HathiSher)
- ✗ C. யோத்தா (Yoddha)
- ✓ D. கஜசிம்ஹா (Gajasimha)

**Q.70** பின்வருவனவற்றுள், இந்தியாவில் வற்றிப்போகக்கூடிய மற்றும் சுற்றுச்சூழலை மாசுபடுத்தக்கூடிய ஆற்றல் வளம் எது?

**Ans**
- ✗ A. சூரிய ஆற்றல்
- ✗ B. காற்று சக்தி
- ✗ C. உயிரி வாயு
- ✓ D. நிலக்கரி

Section : **General Intelligence and Reasoning**

**Q.71** ஆங்கில அகரவரிசையின் அடிப்படையில் கொடுக்கப்பட்ட இத்தொடரில், கேள்விக்குறிக்கு(?) பதிலாக என்ன வர வேண்டும்?

HKS GMP FOM EQJ ?

**Ans**
- ✗ A. MTC
- ✗ B. VTF
- ✗ C. PVE
- ✓ D. DSG

**Q.72** ஆங்கில அகரவரிசையின் அடிப்படையில், பின்வரும் நான்கு எழுத்து-தொகுப்பு ஜோடிகளில் மூன்று ஒரு குறிப்பிட்ட வழிமுறையில் ஒரே போல உள்ளது, இதனால் ஒரு குழுவை உருவாக்குகிறது. அந்தக் குழுவுடன் சேராத ஒன்று எது? (குறிப்பு: மாறுபட்ட ஒன்றானது எழுத்து-தொகுப்பில் உள்ள மெய்யெழுத்துக்கள்/உயிரெழுத்துகளின் எண்ணிக்கை அல்லது அவற்றின் நிலை ஆகியவற்றின் அடிப்படையில் இல்லை.)

**Ans**
- ✗ A. IB-DG
- ✗ B. KD-FI
- ✗ C. NG-IL
- ✓ D. PI-KM

**Q.73** ‘A’ என்பது ‘÷’ ஐக் குறிக்கிறது, ‘B’ என்பது ‘×’ஐக் குறிக்கிறது, ‘C’ என்பது ‘+’ ஐக் குறிக்கிறது,மற்றும் ‘D’ என்பது ‘−’ ஐக் குறிக்கிறது எனில், பின்வரும் சமன்பாட்டில் கேள்விக் குறிக்கு ‘?’ பதிலாக என்ன வரும்?

10 B 3 D 45 A 9 C 2 = ? D 18

**Ans**
- ✗ A. 50
- ✓ B. 45
- ✗ C. 55
- ✗ D. 40

**Q.74** கொடுக்கப்பட்ட தொடரை தர்க்கரீதியாக முழுமையாக்க, பின்வரும் எழுத்து-எண் தொகுப்புகளில் எது, கேள்விக்குறிக்கு (?) பதிலாக வரும்?

HDZM 42 BYFR 36 VTLW 30 PORB 24 ?

**Ans**
- ✗ A. JKYH 16
- ✗ B. KKXG 16
- ✗ C. KJYH 18
- ✓ D. JJXG 18

**Q.75** ஒரு குறிப்பிட்ட குறியீட்டு மொழியில், ‘PACK’ என்பது ‘1376’ என்றும், ‘CAKE’ என்பது ‘7615’ என்றும் குறியிடப்பட்டுள்ளது. எனில், கொடுக்கப்பட்ட குறியீட்டு மொழியில் ‘E’ க்கான குறியீடு என்ன?

**Ans**
- ✗ A. 7
- ✗ B. 6
- ✗ C. 1
- ✓ D. 5

**Q.76** கொடுக்கப்பட்ட தொடரில் '?' க்கு பதிலாக என்ன வரும்?

184 164 146 130 116 104 ?

**Ans**
- ✓ A. 94
- ✗ B. 91
- ✗ C. 96
- ✗ D. 89

Q.77 கொடுக்கப்பட்ட கூற்றுகள் மற்றும் முடிவுகளை கவனமாக படிக்கவும். அது பொதுவாக அறியப்பட்ட உண்மைகளுடன் மாறுபட்டதாகத் தோன்றினாலும், கூற்றுகளில் கொடுக்கப்பட்ட தகவல்கள் உண்மை என்று கருதி, கொடுக்கப்பட்ட முடிவு (களில்) எது/எவை கூற்றுகளிலிருந்து தர்க்கரீதியாக பின்பற்றுகிறது(கின்றன) என்பதைத் தீர்மானிக்கவும்.

கூற்று: எந்த ஆரஞ்சும் ஆப்ரிகாட் அல்ல.அனைத்து ஆப்ரிகாட்களும் ஆப்பிள்கள்.

முடிவு I: எந்த ஆப்பிள்களும் ஒரு ஆரஞ்சுகள் அல்ல.
முடிவு II: சில ஆரஞ்சுகள் ஆப்பிள்களாகும்.

Ans
- ✗ A. முடிவுகள் (I) மற்றும் (II) ஆகிய இரண்டும் பின்பற்றுகின்றன.
- ✓ B. முடிவு (I) அல்லது (II) ஆகிய எதுவும் பின்பற்றவில்லை.
- ✗ C. முடிவு (I) மட்டுமே பின்பற்றுகிறது.
- ✗ D. முடிவு (II) மட்டுமே பின்பற்றுகிறது.

Q.78 கொடுக்கப்பட்ட கூற்றுகள் மற்றும் முடிவுகளை கவனமாக படிக்கவும். பொதுவாக அறியப்பட்ட தகவல்களில் இருந்து மாறுபட்டு இருப்பதாகத் தோன்றினாலும், கொடுக்கப்பட்டுள்ள கூற்றுகள் உண்மையாக இருப்பதாகக் கருதவும். கொடுக்கப்பட்ட கூற்றுகளிலிருந்து எந்த முடிவுகள் தர்க்கரீதியாக பின்பற்றுகிறது(கின்றன) என்பதை நீங்கள் தீர்மானிக்க வேண்டும்.

கூற்றுகள்: சில முடிகள் கம்பிகள் ஆகும். அனைத்துக் கயிறுகளும் கம்பிகள் ஆகும்.
முடிவு (I): சில முடிகள் கயிறுகள் ஆகும்.
முடிவு (II): அனைத்துக் கம்பிகளும் கயிறுகள் ஆகும்.

Ans
- ✗ A. முடிவுகள் (I) மற்றும் (II) ஆகிய இரண்டும் பின்பற்றுகின்றன
- ✓ B. முடிவு (I) அல்லது (II) ஆகிய எதுவும் பின்பற்றவில்லை
- ✗ C. முடிவு (I) மட்டுமே பின்பற்றுகிறது
- ✗ D. முடிவு (II) மட்டுமே பின்பற்றுகிறது

Q.79 ஆங்கில அகரவரிசையின் அடிப்படையில், பின்வரும் நான்கு எழுத்து தொகுப்புகளில் மூன்று ஒரு குறிப்பிட்ட வழிமுறையில் ஒரே போல உள்ளது, இதனால் ஒரு குழுவை உருவாக்குகிறது. எந்த எழுத்து தொகுப்பு அந்த குழுவில் சேராதது ஆகும்?
(குறிப்பு: மாறுபட்ட ஒன்றானது எழுத்து-தொகுப்பில் உள்ள மெய்யெழுத்துக்கள்/உயிரெழுத்துகளின் எண்ணிக்கை அல்லது அவற்றின் நிலை ஆகியவற்றின் அடிப்படையில் இல்லை.)

Ans
- ✓ A. WOK
- ✗ B. RLF
- ✗ C. YSM
- ✗ D. TNH

Q.80 M, N, O, P, X, Y மற்றும் Z ஆகிய ஏழு பெட்டிகள், ஒன்றன் மேல் ஒன்று வைக்கப்பட்டுள்ளன, ஆனால் அதே வரிசையில் இருக்க வேண்டிய அவசியமில்லை.
Y ஆனது கீழிருந்து இரண்டாவது இடத்தில் வைக்கப்பட்டுள்ளது. Y மற்றும் O க்கு இடையில் மூன்று பெட்டிகள் மட்டுமே வைக்கப்பட்டுள்ளன. X ஆனது Y க்கு கீழே உள்ள நிலைகளில் ஒன்றில் வைக்கப்பட்டுள்ளது. N மட்டுமே O மற்றும் P க்கு இடையில் வைக்கப்பட்டுள்ளது. M ஆனது O க்கு மேலே உள்ள நிலைகளில் ஒன்றில் வைக்கப்பட்டுள்ளது.
X மற்றும் M க்கு இடையில் எத்தனை பெட்டிகள் வைக்கப்பட்டுள்ளன?

Ans
- ✗ A. ஒன்று
- ✓ B. ஐந்து
- ✗ C. மூன்று
- ✗ D. நான்கு

**Q.81** P என்பவர் Q இன் சகோதரி. Q என்பவர் S இன் சகோதரர். T என்பவர் X இன் தந்தை. X என்பவர் S இன் மகன். எனில், P என்பவர் X க்கு என்ன உறவு?

**Ans**
- ✗ A. தந்தையின் தாய்
- ✗ B. தாய்
- ✗ C. சகோதரி
- ✓ D. தாயின் சகோதரி

**Q.82** ஆங்கில அகரவரிசையின் அடிப்படையில் கொடுக்கப்பட்ட தொடரில், கேள்விக்குறிக்கு(?) பதிலாக என்ன வர வேண்டும்?

BIRD FMVH JQZL NUDP ?

**Ans**
- ✓ A. RYHT
- ✗ B. RZHS
- ✗ C. SYGT
- ✗ D. SZGS

**Q.83** பின்வரும் எழுத்துத் தொடரைப் பார்த்து, கேள்விக்கு பதிலளிக்கவும்.

(இடது) Z K J H G F D S T U I A W Q P L M N B X (வலது)

ஆங்கில அகரவரிசைத் தொடரில், வலது முனையிலிருந்து ஐந்தாவதாக உள்ள எழுத்திற்கும் மற்றும் இடது முனையிலிருந்து நான்காவதாக உள்ள எழுத்திற்கும் இடையில் எத்தனை எழுத்துக்கள் உள்ளன?

**Ans**
- ✓ A. மூன்று
- ✗ B. ஒன்று
- ✗ C. இரண்டு
- ✗ D. மூன்றுக்கும் மேற்பட்டவை

**Q.84** அகர வரிசையின் அடிப்படையில், பின்வரும் நான்கில் மூன்று ஒரு குறிப்பிட்ட வழிமுறையில் ஒரே போல உள்ளது, இதனால் ஒரு குழுவை உருவாக்குகிறது. அந்தக் குழுவுடன் சேராத ஒன்று எது?
(குறிப்பு: மாறுபட்ட ஒன்றானது எழுத்து தொகுப்பில் உள்ள மெய்யெழுத்துக்கள்/உயிரெழுத்துகளின் எண்ணிக்கை அல்லது அவற்றின் நிலை ஆகியவற்றின் அடிப்படையில் இல்லை.)

**Ans**
- ✗ A. LOQ
- ✓ B. KNQ
- ✗ C. SVX
- ✗ D. NQS

**Q.85** பலாஷ் புள்ளி Y இலிருந்து தொடங்கி மேற்கு நோக்கி 25 km வாகனத்தை ஓட்டுகிறார். பின்னர் அவர் இடதுபுறம் திரும்பி 23 km ஓட்டுகிறார், வலதுபுறம் திரும்பி 51 km ஓட்டுகிறார். அதன் பிறகு அவர் ஒரு இடதுபுறம் திரும்பி 16 km ஓட்டுகிறார். மீண்டும் ஒரு இடதுபுறம் திரும்பி 31 km ஓட்டுகிறார். பின்னர் அவர் வலதுபுறம் திரும்பி 35 km ஓட்டி, இடதுபுறம் திரும்பி 45 km ஓட்டி புள்ளி Z இல் நிறுத்துகிறார். அவர் மீண்டும் புள்ளி Y ஐ அடைய எவ்வளவு தூரம் (மிகக்குறுகிய தூரம்) மற்றும் எந்த திசையில் வாகனத்தை ஓட்ட வேண்டும்? (குறிப்பிடப்படாவிட்டால் அனைத்து திருப்பங்களும் 90° திருப்பங்கள் மட்டுமே.)

**Ans**
- ✗ A. 77 km வடக்கு நோக்கி
- ✗ B. 71 km தெற்கு நோக்கி
- ✗ C. 73 km தெற்கு நோக்கி
- ✓ D. 74 km வடக்கு நோக்கி

Q.86 ஆங்கில அகரவரிசையின் அடிப்படையில், ஒரு குறிப்பிட்ட வழிமுறையில் NQTM என்பது ILOH உடன் தொடர்புடையது. அதே வழிமுறையில், UOLG என்பது PJGB உடன் தொடர்புடையது. அதே தர்க்கத்தைப் பின்பற்றி, கொடுக்கப்பட்ட விருப்பங்களில் HRPW என்பது எதனுடன் தொடர்புடையதாகும்?

Ans
- ✗ A. LFTS
- ✓ B. CMKR
- ✗ C. PDRT
- ✗ D. NTGY

Q.87 கொடுக்கப்பட்ட தொடரில், '?' க்கு பதிலாக என்ன வர வேண்டும்?

17 30 56 95 147 ?

Ans
- ✗ A. 252
- ✗ B. 221
- ✗ C. 225
- ✓ D. 212

Q.88 A, B, D, J, O, T மற்றும் Z ஆகிய ஏழு நபர்கள் ஒரு கிடைவரிசையில் வடக்கு நோக்கி அமர்ந்துள்ளனர். T இன் இடதுபுறத்தில், D மட்டுமே அமர்ந்துள்ளார். D மற்றும் A க்கு இடையில் நான்கு நபர்கள் ட்டுமே அமர்ந்துள்ளனர். O என்பவர் மட்டுமே, Z மற்றும் B க்கு இடையில் அமர்ந்துள்ளார்; மேலும் Z என்பவர் A இன் உடனடி அருகாமையாளர் அல்ல. எனில், T இன் உடனடி இடதுபுறத்தில் அமர்ந்திருப்பவர் யார்?

Ans
- ✗ A. Z
- ✓ B. D
- ✗ C. A
- ✗ D. B

Q.89 ஒரு குறிப்பிட்ட வழிமுறையில் JK 9 என்பது MJ -7 உடன் தொடர்புடையது. அதே வழிமுறையில், PQ 4 என்பது SP -12 உடன் தொடர்புடையது. அதே தர்க்கத்தைப் பின்பற்றி, QR 13 என்பது பின்வருவனவற்றுள் எதனுடன் தொடர்புடையதாகும்?

Ans
- ✓ A. TQ -3
- ✗ B. TM -6
- ✗ C. GH-4
- ✗ D. YT -1

Q.90 A, B, C, D, E, F மற்றும் G ஆகிய ஏழு பெட்டிகள் ஒன்றன் மேல் ஒன்றாக வைக்கப்பட்டுள்ளன, ஆனால் அதே வரிசையில் இருக்க வேண்டிய அவசியமில்லை. C மற்றும் A க்கு இடையில் நான்கு பெட்டிகள் மட்டுமே வைக்கப்பட்டுள்ளன. F ஆனது மட்டுமே C க்கு மேலே வைக்கப்பட்டுள்ளது. D மற்றும் B க்கு இடையில் இரண்டு பெட்டிகள் மட்டுமே வைக்கப்பட்டுள்ளன. G ஆனது E க்கு உடனடி மேலே வைக்கப்பட்டுள்ளது. B ஆனது G க்கு உடனடி மேலே வைக்கப்படவில்லை. எனில், E க்கு உடனடி கீழே எந்தப் பெட்டி வைக்கப்பட்டுள்ளது?

Ans
- ✓ A. B
- ✗ B. F
- ✗ C. A
- ✗ D. G

Q.91 கீழ்க்காணும் சமன்பாட்டில், '+' மற்றும் '–' ஆகியவை ஒன்றுக்கொன்று இடமாற்றம் செய்யப்பட்டு , '×' மற்றும் '÷' ஆகியவை ஒன்றுக்கொன்று இடமாற்றம் செய்யப்பட்டால், கேள்விக்குறி (?) உள்ள இடத்தில் என்ன வரும்?

24 ÷ 5 – 11 + 70 × 14 = ?

Ans
- ✔ A. 126
- ✘ B. 120
- ✘ C. 122
- ✘ D. 123

Q.92 பின்வரும் எண்-ஜோடிகளில், முதல் எண்ணில் சில கணித செயல்பாடுகளை செய்வதன் மூலம் இரண்டாவது எண் பெறப்படுகிறது. பின்வரும் தொகுப்புகளின் எண்களைப் போலவே தொடர்புடைய எண்களின் தொகுப்பைத் தேர்ந்தெடுக்கவும்.

(குறிப்பு: எண்களை அதன் கூறு (constituent) இலக்கங்களாகப் பிரிக்காமல், முழு எண்களில் செயல்பாடுகள் செய்யப்பட வேண்டும். எ.கா. 13 13 -இல் கூட்டல் / கழித்தல் / பெருக்கல் போன்ற செயல்பாடுகளை 13 உடன் செய்யலாம். 13 ஐ 1 மற்றும் 3 ஆக பிரித்த பின்னர் 1 மற்றும் 3 இல் கணித செயல்பாடுகளைச் செய்வது அனுமதிக்கப்படாது)

7 - 14
45 - 90

Ans
- ✘ A. 42 - 82
- ✘ B. 12 - 34
- ✘ C. 8 - 17
- ✔ D. 70 - 140

Q.93 ஒரு குறிப்பிட்ட குறியீட்டு மொழியில், 'rain calms storms' என்பது 'gl ot fr' என்றும் மற்றும் 'patience gently calms' என்பது 'ot mi zp' என்றும் குறியிடப்பட்டுள்ளது. கொடுக்கப்பட்ட மொழியில் 'calms' என்பது எவ்வாறு குறியிடப்படுகிறது?

Ans
- ✘ A. zp
- ✔ B. ot
- ✘ C. gl
- ✘ D. fr

Q.94 8945317 என்ற எண்ணில் உள்ள ஒவ்வொரு இலக்கமும் இடமிருந்து வலமாக ஏறுவரிசையில் அமைக்கப்படுகிறது. எனில், அசல் எண்ணுடன் ஒப்பிடும்போது எத்தனை இலக்கங்களின் நிலை(கள்) மாறாமல் இருக்கும்?

Ans
- ✘ A. ஒன்று
- ✘ B. எதுவுமில்லை
- ✔ C. இரண்டு
- ✘ D. மூன்று

Q.95 ஒரு குறிப்பிட்ட குறியீட்டு மொழியில்,
A ≤ B என்றால் 'A என்பவர் B இன் தந்தை',
A ≠ B என்றால் 'A என்பவர் B இன் மனைவி',
A @ B என்றால் 'A என்பவர் B இன் மகன்' மற்றும்
A ~ B என்றால் 'A என்பவர் B இன் சகோதரி' என கருதப்படுவர்.

மேலே உள்ளவற்றின் அடிப்படையில், 'R ≠ A @ N ≤ C ~ O' என்றால், R என்பவர் O க்கு என்ன உறவு?

Ans
- ✘ A. மனைவி
- ✔ B. சகோதரரின் மனைவி
- ✘ C. தந்தையின் தாயார்
- ✘ D. மனைவியின் சகோதரி

Test Prime By Adda247

# Previous Year Papers PDF


PRACTICE MORE, SCORE HIGHER!

Free 25,000+ PDF's

High-Quality | Exam-Wise | Updated Regularly

ATTEMPT AS MOCK

Turn PDFs into real exam experience.
Analyze. Improve. Succeed.




Topic-wise & Exam-wise PDFs | Download & Study Offline | Attempt as Mock & Track Score | Smart Analysis & Performance

AVAILABLE IN

Banking | SSC | Railway | Teaching | UGC | Agriculture | Nursing

Bihar | UP | Punjab | WB | Odisha | TN | AP & Telangana | Haryana

DOWNLOAD THE APP

| | | |
|---|---|---|
| Q.96 | Refer to the given number series and answer the question that follows. Counting to be done from left to right only. All numbers are single-digit numbers only.<br><br>(Left) 9 2 3 1 4 5 6 8 5 4 3 2 1 9 3 4 5 6 7 8 1 2 9 8 3 4 5 2 6 8 2 (Right)<br><br>How many such odd digits are there, each of which is immediately preceded by an even digit and also immediately followed by an odd digit? | |
| Ans | ✗ A. Three<br>✗ B. None<br>✗ C. One<br>✓ D. Two | |

| | | |
|---|---|---|
| Q.97 | J, U, N, I, O, R மற்றும் S ஆகியோர் ஒரு வட்ட மேசையைச் சுற்றி, மேசையின் மையத்தை நோக்கியபடி அமர்ந்துள்ளனர். S என்பவர் R இன் இடதுபுறத்தில் நான்காவது இடத்தில் அமர்ந்துள்ளார். O என்பவர் U இன் வலதுபுறத்தில் நான்காவது இடத்தில் அமர்ந்துள்ளார். R இன் இடதுபுறத்தில் இருந்து எண்ணும்போது R மற்றும் U க்கு இடையில் இரண்டு நபர்கள் மட்டுமே அமர்ந்துள்ளனர். N என்பவர் O அல்லது R ஆகியோரின் உடனடி அருகாமையாளர் அல்ல. J என்பவர் N இன் உடனடி அருகாமையாளர் அல்ல. I இன் வலதுபுறத்தில் மூன்றாவது இடத்தில் அமர்ந்திருப்பவர் யார்? | |
| Ans | ✗ A. R<br>✓ B. J<br>✗ C. U<br>✗ D. S | |

| | | |
|---|---|---|
| Q.98 | Refer to the following series and answer the question. (Counting to be done from left to right only.) (All numbers are single-digit numbers only.)<br>(Left) 7 3 5 2 3 5 3 5 2 2 5 2 5 2 5 6 5 4 6 5 4 9 9 8 5 5 2 (Right)<br>How many such even digits are there, each of which is immediately preceded by a perfect square and immediately followed by an even digit? (NOTE: 1 is also a perfect square.) | |
| Ans | ✗ A. Two<br>✗ B. One<br>✓ C. None<br>✗ D. Three | |

| | | |
|---|---|---|
| Q.99 | NJ 9 என்பது ஒரு குறிப்பிட்ட வழிமுறையில் QN −9 உடன் தொடர்புடையது. அதே வழிமுறையில், OR 13 என்பது RV −5 உடன் தொடர்புடையது. அதே தர்க்கத்தைப் பின்பற்றினால், VR 19 என்பது கொடுக்கப்பட்ட விருப்பங்களில் எதனுடன் தொடர்புடையதாகும்? | |
| Ans | ✗ A. VZ 3<br>✗ B. YX 6<br>✗ C. CX 5<br>✓ D. YV 1 | |

| | | |
|---|---|---|
| Q.100 | A, B, J, E, C, T மற்றும் S ஆகிய ஏழு பெட்டிகள் ஒன்றன் மேல் ஒன்றாக வைக்கப்பட்டுள்ளன, ஆனால் அதே வரிசையில் இருக்க வேண்டிய அவசியமில்லை. T ஆனது மட்டுமே E க்குக் கீழே வைக்கப்பட்டுள்ளது. A ஆனது மட்டுமே J க்கு மேலே வைக்கப்பட்டுள்ளது. C ஆனது மட்டும் J மற்றும் S க்கு இடையில் வைக்கப்பட்டுள்ளது. எனில், B மற்றும் T க்கு இடையில் எத்தனை பெட்டிகள் வைக்கப்பட்டுள்ளன? | |
| Ans | ✓ A. ஒன்று<br>✗ B. இரண்டு<br>✗ C. மூன்று<br>✗ D. பூஜ்ஜியம் | |

"